# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஐந்தாம் பத்து

## மூன்றாம் திருவாய்மொழி - மாசறு சோதி
## எம்பெருமானது பிரிவு பொறுக்க மாட்டாமல், பராங்குச நாயகி ஆசை மிகுந்து பழிக்கு அஞ்சாமல் மடலூரத் துணிந்ததைக் கூறும் பாசுரம்

** மாசறு சோதி * என் செய்ய வாய் மணிக் குன்றத்தை *
ஆசறு சீலனை * ஆதி மூர்த்தியை நாடியே **
பாசறவு எய்தி * அறிவு இழந்து எனை நாளையம்? *
ஏசறும் ஊரவர் கவ்வை * தோழீ! என் செய்யுமே? 1

என் செய்யும் ஊரவர் கவ்வை? * தோழீ! இனி நம்மை *
என் செய்ய தாமரைக் கண்ணன் * என்னை நிறை கொண்டான் **
முன் செய்ய மாமை இழந்து * மேனி மெலிவு எய்தி *
என் செய்ய வாயும் கருங்கண்ணும் * பயப்பு ஊர்ந்தவே 2

ஊர்ந்த சகடம் * உதைத்த பாதத்தன் * பேய் முலை
சார்ந்து சுவைத்த செவ்வாயன் * என்னை நிறை கொண்டான் **
பேர்ந்தும் பெயர்ந்தும் * அவனோடு அன்றி ஓர் சொல்லிலேன் *
தீர்ந்த என் தோழீ! * என் செய்யும் ஊரவர் கவ்வையே? 3

ஊரவர் கவ்வை எரு இட்டு * அன்னை சொல் நீர் படுத்து *
ஈர நெல் வித்தி முளைத்த * நெஞ்சப் பெருஞ்செயுள் **
பேர் அமர் காதல் * கடல் புரைய விளைவித்த *
கார் அமர் மேனி * நம் கண்ணன் தோழீ! கடியனே? 4

கடியன் கொடியன் நெடிய மால் * உலகம் கொண்ட
அடியன் * அறிவரு மேனி மாயத்தன் ** ஆகிலும்
கொடிய என் நெஞ்சம் * அவன் என்றே கிடக்கும் எல்லே! *
துடி கொள் இடை மடத் தோழீ! * அன்னை என் செய்யுமே? 5

அன்னை என் செய்யில் என்? * ஊர் என் சொல்லில் என்? தோழிமீர்! *
என்னை இனி உமக்கு ஆசை இல்லை * அகப்பட்டேன் **
முன்னை அமரர் முதல்வன் * வண்துவராபதி
மன்னன் * மணி வண்ணன் * வாசுதேவன் வலையுளே 6

வலையுள் அகப்படுத்து * என்னை நல் நெஞ்சம் கூவிக் கொண்டு *
அலை கடல் பள்ளி அம்மானை * ஆழிப் பிரான் தன்னை **
கலை கொள் அகல் அல்குல் தோழீ! * நம் கண்களால் கண்டு *
தலையில் வணங்கவும் ஆங்கொலோ? * தையலார் முன்பே 7

பேய் முலை உண்டு சகடம் பாய்ந்து * மருதிடைப்
போய் முதல் சாய்த்து * புள் வாய் பிளந்து களிறட்ட **
தூ முறுவல் தொண்டை வாய்ப் பிரானை * எந்நாள் கொலோ? *
யாம் உறுகின்றது தோழீ! * அன்னையர் நாணவே 8

நாணும் நிறையும் கவர்ந்து * என்னை நல் நெஞ்சம் கூவிக் கொண்டு *
சேண் உயர் வானத்து இருக்கும் * தேவ பிரான் தன்னை **
ஆணை என்? தோழீ! * உலகு தோறு அலர் தூற்றி * ஆம்
கோணைகள் செய்து * குதிரியாய் மடல் ஊர்துமே 9

யாம் மடல் ஊர்ந்தும் * எம் ஆழி அங்கைப் பிரானுடை *
தூ மடல் தண் அந்துழாய் * மலர் கொண்டு சூடுவோம் **
யாம் மடம் இன்றித் * தெருவு தோறு அயல் தையலார் *
நா மடங்கப் பழி தூற்றி * நாடும் இரைக்கவே 10

** இரைக்கும் கருங்கடல் வண்ணன் * கண்ண பிரான் தன்னை *
விரைக் கொள் பொழில் * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
நிரைக் கொள் அந்தாதி * ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் *
உரைக்க வல்லார்க்கு * வைகுந்தம் ஆகும் தம் ஊர் எல்லாம் 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---